DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar | ... | DEPOSITION OF WITNESS |
| Miscellaneous | | |
| (Chapter.. | | |
| Preliminary Register | ... | Case No. S.C.No.260/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.1<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | வேல்ராஜ் |
| Father's Name | த/பெ.ராமஜெயம் |
| Village | முத்தையாபுரம் |
| Taluk | |
| Age | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2026.

(1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 முதல் 6 எதிரிகள் ஆஜர்.)

முதல் விசாரணை :–

நான் தற்போது திருச்செந்தூர் மெயின்ரோடு சுந்தர்நகரில் குடியிருந்து வருகிறேன். காந்தி டீஸ்டால் என்ற பெயரில் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். 19.04.2024ம் தேதி மாலை 04.00 மணியளவில் எனது கடைக்கு சுமார் அரை கிலோ மீட்டர்தொலைவில் சிலர் சண்டை போட்டு எனது கடை வழியாக ஓடி வந்தார்கள். அதன்பிறகு இரவு சுமார் 09.00 மணியளவில் 6, 7 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து இருதரப்பாக இருந்து அவர்களுக்குள்ளேயே வெட்டிக்கொண்டார்கள். நான் உள்ளே சென்றபோது எனக்கும் தலையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. என்னை யார் வெட்டியது என்று எனக்கு தெரியாது. மேலும்

ஒரு நபருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். அதன்பிறது அதே நபர்கள் எனது கடையில் இருந்த சோ கேஸ், ஐஸ் பிரிசர், கல்லா பெட்டியில் உள்ள சோ கேஸ் மற்றும் 4, 5 சேர்களை உடைத்துவிட்டார்கள். அதனால எனக்கு சுமார் 50000 முதல் 60000/- வரை சேதம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக முத்தையாபுரம் காவல் நிலையத்திற்கு சென்று வாய்மொழியாக விவரம் தெரிவித்துவிட்டு எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது அங்கு ஆய்வாளர் வந்தபோது எழுத்துபூர்வமாக ஒரு புகார் கொடுத்தேன். எனது அண்ணன்தான் அந்த புகாரை எழுதினார். தற்போது நான் பார்வையிடும் புகார்மனு என் அண்ணன் எழுதியதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். வேறு விவரம் எதுவும் எனக்கு தெரியாது. அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

போலிசார் விசாரணையில் 19.04.2024ம் தேதி மாலை 04.00 மணியளவில் எனது கடைக்கு அருகில் வைத்து நேசமணிநகரை சேர்ந்த ஒருவருக்கும் குலையன்கரிசல் ஊரைச் சேர்ந்தவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு பின்னர் அவர்கள் சென்றுவிட்டார்கள் என்றும் அதன்பின்பு இரவு 08.45 மணியளவில் 2 இருசக்கர வாகனங்களில் நான் பின்னர் விசாரித்து தெரிந்துகொண்ட ஆஜர் எதிரிகள் அருவாளுடன் வந்து நேசமணிநகரை சேர்ந்த சுரேஷ்குமார் என்பவரை அருவாளால்வெட்டிவிட்டார்கள் என்றும் அவருக்கு இடது தலை, இடதுகை நடுவிரல், வலதுகை சுண்டுவிரலில் காயங்கள் ஏற்பட்டது என்றும் சம்பவத்தை பார்த்து நானும் எனது கடையில்

வேலை பார்க்கும் சதீஷ்குமார், ஆத்தியப்பன் ஆகியோர் வெட்டாதீர்கள் என்று சத்தம் போட்டபோது எதிரிகளில் ஜெயந்த் என்பவர் எனது உச்சந்தலையில் அருவாளால் வெட்டினார் என்றும் நான் அலறி கீழே விழுந்துவிட்டேன் என்றும் எதிரிகள் எங்களைநோக்கி கொலை மிரட்டல் செய்துவிட்டு என் கடையிலிருந்த இரும்பு சேர், சோ கேஷ் கண்ணாடி, பிரிசர் பாக்ஸ் ஆகியவைகளை அடித்து உடைத்து ரூ.50000/- வரை சேதம் ஏற்படுத்தினார்கள் என்றும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றும் அங்கு வந்த முத்தையாபுரம் உதவி ஆய்வாளரிடம் ஒரு புகார்மனு கொடுத்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -</u>** இல்லை.

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**